www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com

12 ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2024

பதிவு எண்

PART - III

## பொருளியல் (விடைகளுடன்)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள்:**

(1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

### பகுதி - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 × 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**1.** MPC -ஐயும் MPS -ஐயும் கூட்டினால் கிடைப்பது :

(அ) 0.1 (ஆ) 1 (இ) 1.1 (ஈ) 2

**2.** GST இதற்கு சமம் :

(அ) வருமான வரி (ஆ) விற்பனை வரி (இ) உள்ளாட்சி வரி (ஈ) தொழிற்குழும வரி

**3.** அமைப்புசார் வேலையின்மையின் இயல்பு ________.

(அ) இயங்கும் சமுதாயம் (ஆ) இயங்கா சமுதாயம்

(இ) கலப்புப் பொருளாதாரம் (ஈ) சமதர்ம சமுதாயம்

**4.** எந்த பொருளாதாரத்தில் உற்பத்தி உரிமை தனியாருக்கு மட்டுமே உள்ளது?

(அ) உலகமய அமைப்பு (ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்

(இ) கலப்புப் பொருளாதாரம் (ஈ) சமதருமப் பொருளாதாரம்

**5.** இரு மாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து சென்றால் அதனை ________ உடன்தொடர்பு என்கிறோம்.

(அ) பன்முக (ஆ) எதிர்மறை (இ) எளிய (ஈ) நேர்கணிய

**6.** இந்தியாவில், வெளிநாட்டு நேரடி மூலதனம் அனுமதிக்கப்படாத துறை :

(அ) மருந்து உற்பத்தி (ஆ) வங்கி (இ) காப்பீடு (ஈ) அணு ஆற்றல்

**7.** மைய வங்கி நாட்டின் ________ அதிகார அமைப்பு.

(அ) கூலி (ஆ) பணவியல் (இ) தேசிய வருவாய் (ஈ) நிதியியல்

**8.** பணவீக்கம் என்பது :

(அ) பணமதிப்பு அதிகரிப்பு (ஆ) விலைகள் அதிகரிப்பு

(இ) விலைகள் மாறாதிருத்தல் (ஈ) விலைகள் குறைதல்

**9.** சராசரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது :

(அ) Y/C (ஆ) C/Y (இ) C + Y (ஈ) CY



kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**10.** ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு :

(அ) இந்தியா (ஆ) சீனா (இ) வடகொரியா (ஈ) ஜப்பான்

**11.** இந்தியாவில் திட்டக்குழு அமைக்கப்பட்ட ஆண்டு __________.

(அ) 1947 (ஆ) 1950 (இ) 1948 (ஈ) 1951

**12.** கேட்கும் திறன் இழப்பு _______ மாசுவின் விளைவாகும்.

(அ) நீர் (ஆ) ஒலி (இ) நிலம் (ஈ) காற்று

**13.** "புதிய பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?

(அ) ரேக்னர் ஃபிரிஸ்க் (ஆ) ஆடம் ஸ்மித்

(இ) காரல் மார்க்சு (ஈ) ஜே. எம். கீன்சு

**14.** பண மாற்று வீதம் நிர்ணயமாகும் சந்தை :

(அ) பங்குச் சந்தை (ஆ) பணச் சந்தை

(இ) மூலதனச் சந்தை (ஈ) அயல்நாட்டுச் செலாவணி சந்தை

**15.** எவற்றைக் கூட்டி வருமான முறையில் நாட்டு வருமானம் கணக்கிடப்படுகிறது?

(அ) செலவு (ஆ) உற்பத்தி (இ) வருமானம் (ஈ) வரி

**16.** பொருளாதார அளவையியல் எனும் சொல்லை உருவாக்கியவர் :

(அ) கார்ல் பியர்சன் (ஆ) ஃபிரான்சிஸ் கால்டன்

(இ) ஸ்பியர்மேன் (ஈ) ரேக்னர் ஃபிரிஸ்க்

**17.** சிறப்பு எடுப்பு உரிமையின் மற்றொரு பெயர் :

(அ) தன் விருப்ப ஏற்றுமதித் தடைகள் (ஆ) தாள் தங்கம்

(இ) காப்புரிமை (ஈ) பங்களவுகள்

**18.** குறுகிய காலத் திட்டத்தின் இன்னொரு பெயர் :

(அ) சுழல் திட்டம் (ஆ) கட்டுப்படுத்தும் திட்டம்

(இ) சுழற்சியற்ற திட்டம் (ஈ) கட்டுபாட்டை நீக்கும் திட்டம்

**19.** சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையைக் கொண்டு வருவது ________ நெகிழ்வு ஆகும்.

(அ) மூலதனத்தின் (ஆ) தேவையின் (இ) வட்டி வீதத்தின் (ஈ) அளிப்பின்

**20.** இர்விங் ஃபிஷரின் பண அளவுக் கோட்பாடு புகழ்பெற்ற ஆண்டு :

(அ) 1911 (ஆ) 1908 (இ) 1914 (ஈ) 1910

## பகுதி - II

**குறிப்பு :** ஏதேனும் **ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். **வினா எண்.** 30-க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும்.

**7 × 2 = 14**

**21.** முதலாளித்துவம் என்றால் என்ன?

**22.** நெகிழிப் பணம் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.

**23.** 'முழு வேலைவாய்ப்பு' – வரையறுக்கவும்.

**24.** நாட்டு வருமான கணக்கீட்டில் "சொந்த நுகர்வு" எவ்வாறு சிக்கலைத் தருகிறது?

**25.** உடன்பாடில்லா வேலையின்மை பற்றி சிறு குறிப்பு வரைக.

**26.** வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகளைக் குறிப்பிடுக.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**27.** தடையற்ற வாணிகப் பகுதி என்றால் என்ன?

**28.** விதைப் பந்து என்பதன் பொருள் கூறுக.

**29.** 'சுழிய அடிப்படை வரவு-செலவுத் திட்டம்' – குறிப்பு வரைக.

**30.** GST -யின் உள்ளடக்கங்கள் யாவை?

## பகுதி - III

**குறிப்பு : ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண். **40-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

**7 × 3 = 21**

**31.** தனி மனிதர் வருமானத்திற்கும், செலவிடக் கூடிய வருமானத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?

**32.** கீன்சின் கோட்பாட்டை விளக்குக.

**33.** நேர்முக, மறைமுக வரிகளுக்கிடையேயான வேறுபாடுகள் எவையேனும் மூன்றினைக் கூறுக.

**34.** வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்களைக் குறிப்பிடுக.

**35.** இ-கழிவுகள் என்பதன் பொருள் கூறுக.

**36.** சார்க்கின் பணிகளைச் சுருக்கமாகக் கூறுக.

**37.** நிதி ஆயோக்கின் பணிகள் யாவை?

**38.** வரியின் ஏதேனும் மூன்று பண்புகளை எழுதுக.

**39.** பல் வகையான உடன் தொடர்புகளைக் கூறி விளக்குக.

**40.** மின்னணு வங்கி முறை பற்றி எழுதுக.

## பகுதி - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7 × 5 = 35**

**41.** (அ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சன் ஒட்டுறவுக்கெழுவினைக் கண்டறிந்து அதனை விளக்கவும்.

| விலை $x$ | 10 | 12 | 14 | 15 | 19 |
|---|---|---|---|---|---|
| அளிப்பு $y$ | 40 | 41 | 48 | 60 | 50 |

(அல்லது)

(ஆ) நாட்டு வருமானத்தின் முக்கியத்துவத்தை விவரிக்கவும்.

**42.** (அ) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) வறுமையின் நச்சுச் சுழற்சியினை வரைபடத்துடன் விளக்குக.

**43.** (அ) ADF, ASF -க்கு இடையிலான சமநிலையை வரைபடம் மூலம் விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) இந்திய சமூகப் பொருளாதார மேம்பாட்டில் டபிள்யூ.டி.ஓ-ன் பங்கினை விவரிக்கவும்.

**44.** (அ) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

(அல்லது)

(ஆ) அயல் நாட்டுச் செலுத்துச் சமநிலையின் கூறுகளை விளக்குக.

**45.** (அ) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) குறிப்பு எழுதுக. (i) பொதுக் கடன் (ii) முதன்மைப் பற்றாக்குறை

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**46.** (அ) நீடித்த அல்லது வளம்குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்களை விளக்குக.

(அல்லது)

(ஆ) நுகர்வுச் சார்பினை தீர்மானிக்கும் புறக்காரணிகளை விவரிக்கவும்.

**47.** (அ) பேரினப் பொருளியலின் பரப்பெல்லையை விவரிக்கவும்.

(அல்லது)

(ஆ) திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்.

## விடைகள்

### பகுதி - I

**1.** (ஆ) 1
**2.** (ஆ) விற்பனை வரி
**3.** (அ) இயங்கும் சமுதாயம்
**4.** (ஆ) முதலாளித்துவப் பொருளாதாரம்
**5.** (ஈ) நேர்கணிய
**6.** (ஈ) அணு ஆற்றல்
**7.** (ஆ) பணவியல்
**8.** (ஆ) விலைகள் அதிகரிப்பு
**9.** (ஆ) C/Y
**10.** (இ) வடகொரியா
**11.** (ஆ) 1950
**12.** (ஆ) ஒலி
**13.** (ஈ) ஜே. எம். கீன்சு
**14.** (ஈ) அயல்நாட்டுச் செலாவணி சந்தை
**15.** (இ) வருமானம்
**16.** (ஈ) ரேக்னர் ஃபிரிஸ்க்
**17.** (ஆ) தாள் தங்கம்
**18.** (ஆ) கட்டுப்படுத்தும் திட்டம்
**19.** (இ) வட்டி வீதத்தின்
**20.** (அ) 1911

### பகுதி - II

**21.** **முதலாளித்துவம் :**

- முதலாளித்துவப் பொருளாதாரத்தின் தந்தை ஆடம் ஸ்மித் ஆவார்.
- முதலாளித்துவப் பொருளாதாரம் தடையில்லாப் பொருளாதாரம் மற்றும் அங்காடிப் பொருளாதாரம் எனவும் அழைக்கப்படுகிறது.
- இங்கு பொருளாதார நடவடிக்கைகளை தீர்மானிப்பதில் அரசாங்கத்தின் பங்கு குறைவாகவும், சந்தையின் பங்கு அதிகமாகவும் இருக்கும்.
- முதலாளித்துவப் பொருளாதாரத்தில் உற்பத்தி நடவடிக்கைகள் தனியார் வசம் இருக்கும். பண்டங்கள், பணிகளை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள் இலாப நோக்கத்தை முதன்மையாகக் கொண்டிருக்கும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**22. நெகிழிப் பணம் :**

- அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட பணம் நெகிழிப் பணமாகும். இது நிதிப் பொருட்களின் வரிசையில் மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தோற்றமாகும்.
- நெகிழிப் பணம் நடைமுறையிலுள்ள காகிதப் பணத்திற்கு ஒரு மாற்றாகும். தினந்தோறும் பயன்படுத்தும் வகையில் நெகிழி அட்டையால் உருவாக்கப்பட்டிருப்பதால் இது நெகிழிப் பணம் என்றழைக்கப்படுகிறது.
- எ.கா : ரொக்க அட்டை, கடன் அட்டை, பற்று அட்டை போன்றவை ஆகும்.

**23. முழு வேலைவாய்ப்பு :** லர்னரின் கூற்றுப்படி, முழு வேலை நிலை என்பது "கூலியும் விலையும் எந்த வேலைநிலையில் மாறி மாறி அதிகரிக்கின்றதோ அங்கு முழு வேலைவாய்ப்பு நிலவுகிறது" என்கிறார்.

**24. சொந்த நுகர்வுக்கு உற்பத்தி செய்தல் மற்றும் விலை மாற்றம் :**

- உழவர்கள் தங்களின் சொந்த நுகர்விற்காக உற்பத்தியில் ஒரு பகுதியை ஒதுக்கி வைக்கின்றனர்.அங்காடியில் விற்பனை செய்யாமல் ஒதுக்கிய உற்பத்தி நாட்டு வருமானத்தில் சேர்க்கப்பட்டதா என்பதை கண்டறிவதில் சிக்கல் ஏற்படுகிறது.
- உற்பத்தி முறையில் நாட்டு வருமானம் கணக்கிடுதல் என்பது நடப்பு அங்காடி விலையில் வினை முடிவடைந்த பண்டங்களின், பணிகளின் மதிப்பை அளவிடுதல் ஆகும்.
- பொருளியல் அறிஞர்கள் நுகர்வோர் விலை குறியீட்டெண்ணைப் பயன்படுத்தி நிலையான விலையில் உண்மை நாட்டு வருமானத்தை கணக்கிடுகின்றனர்.

**25. உடன்பாடில்லா வேலையின்மை :**

- உழைப்பாளர்களின் தேவை மற்றும் அளிப்பில் சமநிலையற்ற தன்மை நிலவுவதால் தற்காலிக அல்லது பிறழ்ச்சி வேலையின்மை ஏற்படுகிறது.
- உழைப்பாளர்கள் ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு இடம்பெயராமை, திறமைப் பற்றாக்குறை, இயந்திரங்களில் பழுது ஏற்படுதல், மூலப்பொருட்கள் பற்றாக்குறை முதலான காரணங்களால் உடன்பாடில்லா (பிறழ்ச்சி) வேலையின்மை ஏற்படுகிறது.

**26. வேளாண் கடன் வழங்கும் துறையின் பணிகள் :**

- நிபுணத்துவம் பெற்ற அலுவலரை நியமித்து வேளாண் கடன் தொடர்பான அனைத்து வினாக்களையும் ஆய்வு செய்வது.
- மைய அரசு, மாநில அரசு, மாநில கூட்டுறவு வங்கிகள் மற்றும் இதர வங்கி நடவடிக்கைகளில் நிபுணத்துவம் வாய்ந்த ஆலோசனைகளை வழங்குவது.
- ஊரகத் துறைக்குத் தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலமாக வேளாண்மைக் கடன் வழங்குவது மேலும் அவைகளை ஒருங்கிணைப்பது ஆகியவையாகும்.

**27. தடையற்ற வாணிகப் பகுதி :**

- ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட உறுப்பினர் நாடுகள் அனைத்தும் ஒரே மண்டலமாகக் கருதி வாணிகத்தடைகளைக் குறைக்க ஒத்துழைக்கும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளுக்கிடையே ஒப்பந்தம் போடப்படுகிறது.
- **(எ.கா) :** SAFTA, EFTA

**28. விதைப்பந்து :**

- ஒரு விதை மண்ணால் மூடி வைக்கப்படுகிறது.
- அந்த மண் உரம் கலந்த களிமண்ணாகும்.
- பின்பு அது உலர்த்தப்பட்டு எங்கு வேண்டுமோ அங்கு அதனை விதைக்கலாம்.
- இவ்வாறு செய்யும் போது, அந்த விதை முன்பே நடப்பட்டுவிட்டது என்றே பொருள்.

**29. சுழிய அடிப்படை வரவு செலவுத் திட்டம் :**

- இந்திய அரசு 1987-88ல் சுழிய வரவு செலவுத்திட்டத்தை தாக்கல் செய்தது.
- இதில் ஒவ்வொரு செலவினமும் புதியதாகக் கருதப்பட்டு ஒவ்வொரு ஆண்டும் மதிப்பீடுகள் செய்யப்படும். புதிய இனமாக கருதப்பட்டு அரசு பட்ஜெட்டில் புதிதாக செலவு மதிப்பீட்டைக் கொண்டுள்ளது.
- சமூகத்தின் முந்தைய முன்னுரிமைகளை சமூக பொருளாதார நோக்கங்களின் பார்வையில் மறு ஆய்வு செய்யப்பட்டு நியாயப்படுத்தும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**30.** GST–ன் உள்ளடக்கங்கள் மூன்று வகைப்படும் அவை.

- CGST- மாநிலத்திற்குள்ளே நடைபெறுகிற விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மாநிலத்திற்குள்/ஒன்றியப்பகுதி)
- SGST- மாநிலத்திற்குள் நடைபெறும் விற்பனையில் மாநில அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மாநிலத்திற்குள்/ஒன்றியப்பகுதி)
- IGST- மாநில அரசுகளுக்கிடையேயான விற்பனையில் மத்திய அரசால் வசூலிக்கப்படுவதாகும். (எ.கா. மராட்டிய மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு பொருள் விற்பனை).

## பகுதி - III

**31.**

| | தனிமனிதர் வருமானம் | செலவிடக்கூடிய வருமானம் |
|---|---|---|
| ■ | தனிமனிதர் வருமானம் என்பது ஒரு ஆண்டில் ஒரு நாட்டில் வாழும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் பல வழிகளில் இருந்து கிடைக்கப் பெறும் மொத்த வருமானம் ஆகும். | செலவிடக்கூடிய வருமானம் என்பது தனிமனிதர் செலவிடக்கூடிய வருமானத்தைக் குறிக்கிறது. |
| ■ | வட்டியாகவோ, வாரமாகவோ, கூலியாகவோ இருக்கலாம். இவை அனைத்தையும் ஒவ்வொரு தனிமனிதருக்கும் கூட்டினால் அது தனிமனிதர் வருமானம் ஆகும். | இந்த வருமானம் தான் தனிமனிதர்கள் நுகர்வுக்காக செலவிடக்கூடிய பண அளவு ஆகும். |
| ■ | **சூத்திரம் :** தனிமனிதர் வருமானம் = நாட்டு வருமானம் – (சமூக பாதுகாப்பு பங்களிப்பு மற்றும் பகிரப்படாத கார்பரேட் இலாபம்) + மாற்று செலுத்துதல்கள். | **சூத்திரம் :** செலவிடக்கூடிய வருமானம் = தனிமனிதர் வருமானம் – நேர்முக வரிகள். |

**32. கீன்சின் கோட்பாடு :**

- புதியப் பொருளாதாரக் கோட்பாடுகளின் வளர்ச்சியில், கீன்சு எழுதிய புத்தகமான “வேலைவாய்ப்பு, வட்டி, பணம் பற்றிய பொதுக்கோட்பாடு.” ஒரு திருப்புமுனையாக இருக்கிறது.
- கீன்சின் கோட்பாடு, முழு வேலைவாய்ப்பு கருத்தை மட்டும் விளக்காமல், குறைந்த வேலை நிலைக்கும் வாய்ப்பு இருப்பதை சுட்டிக்காட்டுகிறது.
- கீன்சின் கோட்பாடு ஒரு பொதுக் கோட்பாடாகவேத் திகழ்ந்தது. இது எல்லா வகைச் சூழ்நிலைகளுக்கும் பொருந்துவதாக இருக்கிறது.
- கீன்சின் கருத்துகள் குறுகிய காலத்தை அடிப்படையாகக் கொண்டு இருந்தன.
- அவரது கருத்துப்படி, வேலைவாய்ப்பின் அளவு நிர்ணயிக்கப்படும் போது உற்பத்திக் காரணிகளான மூலதனம், உழைப்பு, திறன், தொழில்நுட்பம் ஆகியவை மாறாமலேயே இருக்கும்.

**33.**

| ஒப்பீட்டிற்கான அடிப்படை | நேர்முக வரி | மறைமுக வரி |
|---|---|---|
| பொருள் | நேர்முக வரி என்பது ஒருவரின் வருமானம், செல்வத்தின் மீது விதிக்கப்பட்டு நேரடியாக அரசுக்குச் செலுத்துவதாகும். | மறைமுக வரி என்பது ஒருவர் நுகரும் பண்டங்கள், பணிகள் மீது விதிக்கப்பட்டு மறைமுகமாக அரசுக்குச் செலுத்துவதாகும். |
| இயல்பு | வளர்வீதம் | தேய்வீதம் |
| சுமையும் தாக்கமும் | ஒரே ஒருவர் மீது விழுகிறது. | பலர் மீதும் வரிச்சுமை விழுகிறது. |

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**34. வெளிநாட்டு நேரடி மூலதனத்தின் நோக்கங்கள் :**

- விற்பனையை விரிவுப்படுத்துதல்
- இயற்கை வளங்களைக் கையகப்படுத்துதல்
- வாணிக பரவலாக்கம்
- போட்டி இடர்களைக் குறைத்தல்

**35. இ–கழிவுகள் :**

- செய்தி, தொழில்நுட்ப வளர்ச்சியில் E–கழிவுகள் என்று பொதுவாக அழைக்கப்படும் மின்னணுக் கழிவுகள் ஏற்படுகின்றன.
- இவை குளிர்சாதனப் பெட்டிகள், காற்றுச் சீரமைப்பிகள், (Air conditioners), கைபேசிகள், கணினிகள் முதலான பெருமளவில் வீட்டு உபயோகத்திற்குப் பயன்படுத்தும் மின்னணுச் சாதனங்களை உள்ளடக்கியவையாகும்.
- தொலைசாதனம், கணினிகள், கேட்கும் கருவிகள், தொலைபேசி, VCR, DVD, தொலைநகல், நகலெடுக்கும் இயந்திரங்கள், கம்பியில்லா கருவிகள் முதலான வீட்டு பயன்பாட்டு பொருட்களை கழிக்கும் போதோ அல்லது மறுசுழற்சி செய்யும் போதோ E–கழிவுகள் தோன்றும்.

**36.** சார்க்கின் பணிகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன.

- தெற்காசிய நாடுகளின் ஒத்துழைப்பை பராமரித்தல்.
- உறுப்பினர் நாடுகளின் பொதுவான சிக்கல்களுக்கு தீர்வு காணுதல்.
- உறுப்பினர் நாடுகளிடையிலான உறவை மேம்படுத்துதல்.
- வறுமை ஒழிப்புத்திட்டங்கள் மூலம் ஏழ்மையை ஒழிப்பது.
- பயங்கரவாதச் செயல்களைத் தடுப்பது.

**37. நிதி ஆயோக்கின் பணிகள் :**

- கூட்டுறவும் போட்டி அடிப்படையிலான கூட்டாட்சியும்
- நாட்டின் நிகழ்வுகளின் மாநிலங்களைப் பங்கெடுக்க வைத்தல்
- பரவலாக்கப்பட்டத் திட்டமிடல்
- தொலைநோக்கும், காட்சித் திட்டமிடலும்
- நிபுணர்களின் கூட்டமைப்பை உருவாக்குதல்
- உகந்ததாக்குதல்
- சச்சரவுத் தீர்த்தல்
- வெளியுலகத் தொடர்பை ஒருங்கிணைத்தல்
- உள்நாட்டு ஆலோசனை வழங்குதல்
- திறன் உருவாக்குதல்
- கண்காணித்தலும் மதிப்பிடுதலும்

**38. வரியின் பண்புகளாவன :**

- வரி என்பது அரசுக்கு கட்டாயமாக செலுத்தக்கூடிய ஒன்றாகும்.
- ஒவ்வொரு வரியும் வரி செலுத்துவோரின் தியாகத்தை உள்ளடக்கியது.
- வரியானது சட்டத்தை மீறியதற்காக சுமத்தப்படும் தண்டத்தொகை போன்று விதிக்கப்படுவதல்ல.

**39. உடன் தொடர்பின் வகைகள் :**

- **மாறிகளுக்கு இடையேயான உறவின் திசை அடிப்படையில் :** மாறிகள் ஒன்றுக்கொன்று நேர்கணியமாகவோ, எதிர்மறையாகவோ உறவு கொண்டிருக்கும். அதன் அடிப்படையில் உடன் தொடர்பினை நேர்கணிய உடன்தொடர்பு, எதிர்மறை உடன்தொடர்பு என பாகுபடுத்தப்படுகின்றது.
- **நேர்கணிய உடன்தொடர்பு :** இரு மாறிகளின் மதிப்புகளும் ஒரே திசையில் நகர்ந்து சென்றால் அதனை நேர்கணிய உடன் தொடர்பு என்கிறோம்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



- **எதிர்மறை உடன்தொடர்பு :** இரு மாறிகளின் மதிப்புகள் எதிர் எதிர் திசையில் நகர்ந்து சென்றால் அதனை எதிர்மறை உடன் தொடர்பு என்கிறோம்.

**பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில்:**

- உடன்தொடர்பு பகுப்பாய்வுக்கு எவ்வளவு எண்ணிக்கையிலான மாறிகளை எடுத்துக் கொள்கிறோம்.
- **எளிய உடன்தொடர்பு :** உடன்தொடர்பு பகுப்பாய்வில் ஒரு நேரத்தில் இரு மாறிகளை மட்டும் எடுத்துக் கொண்டால் அதனை எளிய உடன் தொடர்பு என்கிறோம்.
- **பன்முக உடன்தொடர்பு :** உடன்தொடர்பு பகுப்பாய்வில் இரண்டிற்கும் மேற்பட்ட காரணிகளை ஒரு சேர எடுத்துக் கொண்டால் அது பன்முக உடன் தொடர்பு என்கிறோம்.
- **பகுதி உடன்தொடர்பு :** உடன்தொடர்பு பகுப்பாய்வில் இரண்டுக்கு மேற்பட்ட காரணிகளை எடுத்துக் கொண்டாலும், அவற்றில் இரண்டு காரணிகளை மட்டும் (மற்றவை மாறாமல் இருக்கும் என வைத்துக் கொண்டு) பகுத்தாய்ந்தால், அதனை பகுதி உடன்தொடர்பு என்கிறோம்.

**பகுப்பாய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மாறிகளின் மாறும் விகித அடிப்படையில் :**

- **நேர்கோட்டு உடன்தொடர்பு :** இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இருந்தால் அதனை நேர்கோட்டு உடன்தொடர்பு என்கிறோம்.
- **வளைகோட்டு உடன்தொடர்பு :**இரு மாறிகளின் மாறும் விகிதங்கள் ஒரே அளவாக இல்லாமல் குறைந்து வந்தாலோ, அல்லது அதிகரித்து வந்தாலோ அதனை வளைகோட்டு உடன்தொடர்பு என்கிறோம்.

**40. மின்னணு வங்கி முறை :**

- மின்னணு வங்கியானது நிகழ்நிலை வங்கி முறை அல்லது இணைய வங்கி முறை எனவும் அழைக்கப்படுகிறது. இம்முறையில் ஒரு வங்கி அல்லது நிதிநிறுவனத்தின் வாடிக்கையாளர்கள் தங்களது பல்வேறு நிதிப்பரிமாற்றங்களை அவ்வங்கி அல்லது நிறுவனத்திற்கு நேரில் செல்லாமல் அவற்றின் இணையதளத்திலேயே நிகழ்த்துவது ஆகும்.
- பாரம்பரியமான கிளை வங்கிமுறை போல் அல்லாது இவ்வங்கி முறையில் மையப்படுத்தப்பட்ட வங்கிகளுக்குள் இணைப்பினை ஏற்படுத்தி பரிமாற்றங்களும் பிற வங்கி நடவடிக்கைகளும் நடைபெறுகின்றன. இன்றைய இந்த மெய்நிகர் வங்கி முறை வழக்கமான வங்கிமுறையுடன் ஒப்பிடும்பொழுது பரிமாற்றங்களுக்கான செலவையும் நேரத்தையும் பெருமளவுக்குக் குறைக்கின்றது.

## பகுதி - IV

**41.** (அ) **உறுப்பு மதிப்புகளை நேரிடையாகப் பயன்படுத்தும் முறை :**

| விலை (X) | அளிப்பு (Y) | XY | $X^2$ | $Y^2$ |
|---|---|---|---|---|
| 10 | 40 | 400 | 100 | 1600 |
| 12 | 41 | 492 | 144 | 1681 |
| 14 | 48 | 672 | 196 | 2304 |
| 15 | 60 | 900 | 225 | 3600 |
| 19 | 50 | 950 | 361 | 2500 |
| $\Sigma X = 70$ | $\Sigma Y = 239$ | $\Sigma XY = 3414$ | $\Sigma X^2 = 1026$ | $\Sigma Y^2 = 11685$ |

$$r = \frac{N\Sigma XY - (\Sigma X)(\Sigma Y)}{\sqrt{N\Sigma X^2 - (\Sigma X)^2}\sqrt{N\Sigma Y^2 - (\Sigma Y)^2}}$$

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



$$= \frac{(5\times3414)-(70\times239)}{\sqrt{(5\times1026)-(70)^2}\sqrt{5\times11685-(239)^2}}$$

$$r = \frac{17,070-16,730}{\sqrt{230\times1304}}$$

$$r = \frac{340}{547.65} = \mathbf{+0.621}$$

மேற்கண்ட விவரங்களின் படி உடன்தொடர்புக் கெழுவின் அளவு 0.0621 என்றிருக்கிறது. ஆகவே, பொருளின் விலைக்கும், அளிப்பிற்கும் நேரடி உறவும் குறிப்பிடத்தகுந்த அளவுக்கு உறுதியான உறவும் உள்ளது.

(அல்லது)

(ஆ) **நாட்டு வருமானத்தின் முக்கியத்துவம் :**

- நாட்டு வருமானம் கணக்கீட்டின் மூலம், பொருளாதாரத்தில் இருக்கும் பல்வேறு துறைகளின் முக்கியத்துவம் பற்றியும் நாட்டு வருமானத்தில் அத்துறைகளின் பங்களிப்பு பற்றியும் அறிய முடிகின்றது.
- நாட்டளவிலான பணவியல் கொள்கைகள், பொது நிதிக் கொள்கைகள் ஆகியவற்றை உருவாக்கவும், பொருளாதாரத்தைச் சரியான பாதையில் இட்டுச் செல்லவும் கடைப்பிடிக்க வேண்டிய சரியான வழிமுறைகளைக் கையாளவும் நாட்டு வருமானம் ஆய்வு உதவுகிறது.
- திட்டமிடுதலுக்கும், திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் நாட்டின் மொத்த வருமானம், உற்பத்தி, சேமிப்பு மற்றும் நுகர்ச்சியின் அளவு ஆகிய புள்ளி விவரங்களை நாட்டு வருமானம் கணக்கீடு அளிக்கின்றது.
- குறுகிய கால, நீண்ட கால பொருளாதார மாதிரிகளை உருவாக்க நாட்டு வருமானம் கணக்கீடு பயன்படுகிறது.
- துறைவாரியான பொருளாதார விவரங்களையும், ஒரு நாட்டில் வட்டாரங்களின் வருமானத்தை ஒப்பிடவும், மற்ற நாடுகளின் வருமானத்தோடு ஒப்பிடவும், நாட்டு வருமானம் விவரங்கள் பயன்படுகின்றன.
- நாட்டு வருமானம் மூலம் தலா வருமானம் கணக்கிடப்படுகிறது.
- ஒரு நாட்டில் இருக்கும் பல்வேறு உற்பத்தி காரணிகளுக்கான வருமானப் பகிர்வை தெரிந்துகொள்ள நாட்டு வருமானம் பயன்படுகிறது.
- பேரியல் பொருளாதாரக் காரணிகளான வரி – GDP விகிதம், நடப்புக் கணக்கு பற்றாக்குறை – GDP விகிதம், நிதிப்பற்றாக்குறை – GDP விகிதம், கடன் – GDP விகிதம் ஆகியவற்றைக் கண்டறிய உதவுகிறது.

**42.** (அ) ஒவ்வொரு நாட்டின் மைய வங்கி அந்த நாட்டின் தலைமை வங்கியாகும். இந்தியாவின் மைய வங்கி இந்திய ரிசர்வ் வங்கி என அழைக்கப்படுகிறது. 1935ஆம் ஆண்டு முதல் ரிசர்வ் வங்கி தனது பணியினைத் துவங்கியது.

**ரிசர்வ் வங்கியின் பணிகளாவன :**

- **பண அதிகார அமைப்பு :** இது இந்தியாவில் பண அளிப்பினை கட்டுப்படுத்துவதன் மூலம் அயல்நாட்டு செலாவணி பரிமாற்ற விகிதத்தினை நிலைப்படுத்துதல், சாதகமான செலுத்துநிலையைப் பேணுதல், நிதி நிலைத்தன்மையை ஏற்படுத்துதல், பண வீக்கத்தை கட்டுப்படுத்துதல் மற்றும் வங்கி அமைப்பை உறுதியாக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது.
- **காகிதப் பண வெளியீடு :** காகிதப் பணத்தை வெளியிடுவதில் முற்றுரிமைப் பெற்ற நிறுவனம் ரிசர்வ் வங்கியாகும்.
- **வங்கி உரிமங்கள் வழங்குபவர் :** வங்கிகள் முறைப்படுத்துதல் சட்டம், பிரிவு 22இன் படி ஒவ்வொரு வணிக வங்கியும் இந்தியாவில் வங்கித்தொழில் செய்ய மைய வங்கியிடம் உரிமம் பெற வேண்டியது அவசியம் ஆகும், இப்பணியையும் ரிசர்வ் வங்கி செய்கின்றது.
- **அரசுக்கான வங்கி :** இது மத்திய, மாநில அரசுகளுக்கான வங்கி ஆகும். அரசுகளுக்கு குறுகியகாலக் கடன்கள், கடன் தொடர்பான சேவைகள், அரசின் கடன் பத்திரங்களை உருவாக்கி விற்பனை செய்வது மேலும் வங்கி மற்றும் நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்குவது போன்ற பணிகளைச் செய்கிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com




- **வங்கிகளின் வங்கி :** இது அனைத்து வங்கிகளுக்கும் தலைமை வங்கியாகும். வங்கிகளின் வைப்புகளை ஏற்று, மாற்று சீட்டுகளை மறு தள்ளுபடி செய்வதால் இது வங்கிகளின் வங்கி எனப்படுகிறது.
- **கடை நிலைக்கடன் ஈவோன் :** வணிக வங்கிகளுக்கு தீர்க்க இயலாத நிதிச் சிக்கல்கள் ஏற்படும் பொழுது, நிதிக்கான மற்ற ஆதாரங்கள் இல்லாத சூழ்நிலையில் அச்சிக்கலில் இருந்து மீள்வதற்கு இந்திய ரிசர்வ் வங்கி ஈட்டுக்கடனை அளித்து உதவுகிறது.
- **தீர்வாக செயல்படுகிறது :** வங்கிகளுக்கிடையே நடக்கும் பரிமாற்றங்களை தனது 14 தீர்வகங்களைக் கொண்டு இந்திய ரிசர்வ் வங்கி சமன் செய்கின்றது. பரிமாற்றக் கருவிகளைப் பரிமாறிக் கொள்ள உதவுவதுடன், பரிமாற்றம் தொடர்பான அறிவுறுத்தல்களையும் வழங்குகிறது.

(அல்லது)

(ஆ) **வறுமையின் நச்சுச் சுழற்சி :** நச்சுச் சுழலானது ஒன்றைத் தொடர்ந்து மற்றொன்று ஏழைநாடுகளை தொடர்ந்து வறுமை நிலையிலேயே வைத்திருக்கும் விதத்தில் செயல்படுவதைக் குறிப்பதாக ராக்னார் நர்க்ஸ் கூறுகிறார். எடுத்துக்காட்டாக ஒரு ஏழையிடம் உண்பதற்குப் போதுமான உணவு இல்லை – குறைவான உணவு அவருடைய உடல் நிலையைப் பலவீனப்படுத்திவிடும். பலவீனமாக இருப்பவரின் உழைக்கும் தகுதி குறைவாக இருக்கும். உழைக்கும் திறன் குறைவாக இருந்தால் குறைவான வருமானம் ஈட்டுவார் வருமானம் குறைவாக இருப்பதால் அவர் ஏழை.

- வறுமையின் நச்சுச் சுழற்சி தேவைப் பக்கத்திலிருந்தும் அளிப்பின் பக்கத்திலிருந்தும் செயல்படுகிறது.
- அளிப்பின் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக சேமிப்பு அளவு குறைகிறது. இது முதலீட்டு அளவைக் குறையச் செய்து மூலதனப் பற்றாக்குறையை உருவாக்குகிறது. இதனால் உற்பத்தித் திறன் குறைந்து வருமானமும் குறைகிறது. இவ்வாறு அளிப்புப் பக்கத்தில் வறுமை நச்சுச் சுழற்சி செயல்படுகிறது.
- தேவைப் பக்கத்திலிருந்து பார்த்தால், குறைவான உண்மை வருமானம் காரணமாக தேவையும் குறைவாக இருக்கும்.
- இது முதலீட்டைக் குறைக்கச் செய்யும், இதனால் மூலதன பற்றாக்குறை ஏற்பட்டு உற்பத்தி குறைந்து வருமானத்தை குறைக்கும்.

**வறுமை நச்சுச் சுழற்சி**




kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**43.** (அ) **ADF மற்றும் ASF ன் சமநிலை :**


கீன்சின் வேலைவாய்ப்பு கோட்பாட்டில், ADF மற்றும் ASF ஆகியவற்றின் சமநிலையை விளக்க, குடும்பங்கள், வணிகம் ஆகிய இரு துறைகள் எடுத்துக் கொள்ளப்படுகிறது.

- நுகர்வுச் செலவு தொடர்பான முடிவுகளை குடும்பங்களும், முதலீடு தொடர்பான முடிவுகளை வணிக நிறுவனங்களும் எடுக்கின்றன.
- மேலும் நுகர்வுச் சார்பு நேர்கோடாகவும், முதலீடு தன்னிச்சையானது எனவும் கீன்சின் கோட்பாடு ஊகிக்கிறது.

கீன்சின் கோட்பாட்டில் வருமான சமநிலையை நிர்ணயிக்க இரு அணுகு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன.

1. தொகு தேவை, தொகு அளிப்பு அணுகுமுறை.
2. சேமிப்பு, முதலீடு அணுகுமுறை.

- மொத்த தேவை, மொத்த அளிப்பு அணுகுமுறை இவ்வரைபடத்தில் விளக்கப்பட்டுள்ளது.




- தொகு தேவையும், தொகு அளிப்பு 'E' எனும் புள்ளியில் சமநிலை அடைகின்றன.
- இப்புள்ளியில் வேலைவாய்ப்பு $N_0$ ஆக இருக்கும். $ON_1$ அளவு வேலைவாய்ப்பில், தொகு அளிப்பு $N_1R_1$ ஆக இருக்கும் ஆனால் $M_1N_1$ அளவு உற்பத்தி செய்ய உற்பத்தியாளர்களால் முடியும்.
- எதிர்பார்க்கும் இலாபத்தை அடைய வேண்டிய உற்பத்தியின் அளவு $M_1R_1$ ஆகும்.
- இந்த இலாப நிலையில் முதலாளி அதிக உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவார்.
- சமநிலை 'E' என்ற புள்ளியை அடைந்த பிறகு உழைப்பாளர்களை வேலைக்கு அமர்த்துவதை நிறுத்துவார். ஏனெனில் $N_0$ நிலைக்குப் பிறகு வேலைவாய்ப்பு அதிகரித்தால் தொகு தேவை, தொகு அளிப்பை விடக் குறைவாக இருக்கும்.
- ஆகவே வேலைச் சமநிலையை விளக்குவதில் விளைவுத்தேவைக் கருத்து முக்கியப் பங்கு வகுக்கிறது.

(அல்லது)

(ஆ) **இந்தியாவும் பன்னாட்டு வாணிக அமைப்பும்: –**

- பன்னாட்டு வாணிக அமைப்பு செயல்படத் தொடங்கிய ஆண்டிலிருந்தே இந்தியா அதன் உறுப்பு நாடாகும்.
- பலதரப்பு விவாதங்கள் மூலமாக தீர்வுகள் காண்பதற்கு இந்தியாவின் ஆதரவு எப்பொழுதுமே உண்டு.
- பன்னாட்டு வாணிக நிறுவனத்தின் உறுப்பினரானதால் இந்தியாவுக்கு கீழ்க்காணும் விதங்களில் நன்மைகளைப் பெற்றுள்ளது.

**நன்மைகள் :**

- இறக்குமதி வரி குறைக்கப்பட்டதால் இடு பண்டங்கள், உதிரி பாகங்கள், இயந்திரங்கள் ஆகியன இந்தியாவுக்குக் குறைவான விலையில் அதிகமாக கிடைத்துள்ளன.
- நாடுகளுடன் தனித்தனியே ஒப்பந்தம் போடாமல் பல நாடுகளில் இந்தியா பண்டங்களை விற்பனை செய்ய முடிகிறது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com




- குறைந்த செலவில் உயர்வகை தொழில்நுட்பம் கிடைத்துள்ளது.
- பன்னாட்டுப் பரிமாற்றம் தொடர்புள்ள புகார்களுக்கு எளிதில் தீர்வு கிடைக்கும் நிலை உருவாகியுள்ளது.
- பரந்த அங்காடி தகவலிலிருந்து இந்திய ஏற்றுமதியாளர்கள் பலனடைகின்றனர்.

**44.** (அ) **J.B. சேயின் சந்தை விதியின் திறனாய்வுகளாவன :**

- கீன்சின் கருத்துப்படி, அளிப்பு அதற்கான தேவையை உருவாக்காது.
- உற்பத்தி அதிகரிக்கும் அளவிற்கு தேவை அதிகரிக்காவிட்டால் இந்த விதி செயல்படாது.
- பொருளாதாரத்தில் தானாக சரி செய்து கொள்ளும் அமைப்பு வேலையின்மையைக் குறைக்காது.
- தனிமனிதர்கள் எதிர்பாராத சூழ்நிலைகளுக்காகவும், வணிகர்கள் எதிர்கால நடவடிக்கைகளுக்காகவும் பணத்தை இருப்பாக வைத்திருப்பார்கள் ஆகவே பணம் நடுநிலையாக இருக்காது.
- சேயின் அங்காடி விதியானது, அளிப்பு தன் தேவையைத் தானே உருவாக்கும் என்ற அடிப்படையில் செயல்படுவதால், அதிக உற்பத்திக்கு வாய்ப்பு இல்லை என்று கூறுகிறது.
- முதலாளித்துவ நாடுகளில் குறைவான வேலை உள்ளதால் முழு வேலை வாய்ப்புக்கு வாய்ப்பில்லை என்று கீன்சு கூறுகிறார்.
- அளவுக்கு அதிகமான உற்பத்தியும், அதிக வேலையின்மையும் பல முதலாளித்துவ நாடுகளில் காணப்படுவதால் அரசுத் தலையீடு அவசியம் என கீன்சு கருதுகிறார்.

(அல்லது)

(ஆ) **அயல்நாட்டு செலுத்து சமநிலையின் கூறுகள்**




**அயல்நாட்டு செலுத்துநிலையின் கூறுகள் :**

- வரவு, பற்று இனங்கள் நேர்க்கிடையாக அயல் நாட்டுச் செலுத்து சமநிலை அறிக்கையில் பதியப்படுகின்றன. அவை படுக்கைகிடைமட்டமாக கீழ்க்காணும் மூன்று இனங்களாக வகைப்படுத்தப்படுகின்றன.

  1. நடப்புக் கணக்கு, 2. மூலதனக் கணக்கு, 3. மைய வங்கித் தீர்வுக் கணக்கு அல்லது மைய வங்கி நிதிச் சொத்துக் கையிருப்புக் கணக்கு.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



- **நடப்புக் கணக்கு:** பன்னாட்டுப் பண்டப் பரிமாற்றங்கள், பன்னாட்டுப் பணி பரிமாற்றங்கள்,(சுற்றுலா, போக்குவரத்து உரிமைத்தொகை), பன்னாட்டு ஒருதரப்புச் செலுத்துகைகள் (பரிசுத் தொகை, அயல் நாட்டு உதவி) பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின் கீழ் பதியப்படுகின்றன.
- **மூலதனக் கணக்கு:**வெளிநாட்டுக் கடன், அயல் நாட்டு முதலீடு, பன்னாட்டுப் பண, நிதி அங்காடி விற்றல் வாங்கல் பரிமாற்றங்கள் இந்தக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்படுகின்றன.

**மையவங்கி நிதி சொத்து கையிருப்புக் கணக்கு:**

- மைய வங்கியின் கையிருப்பில் உள்ள செலாவணி சொத்துக்களில் நடைபெறும் பரிவர்த்தனை இந்த கணக்கில் பதிவு செய்யப்படுகிறது.
- உபரி எழுந்தால் கையிருப்புக் கணக்கில் சேர்க்கப்படும்.
- பற்றாக்குறை எழுந்தால் கையிருப்பிலிருந்து எடுத்து செலவிடப்படும். எனவேதான் இதற்கு மைய வங்கி கையிருப்பு தீர்வு கணக்கு என்ற பெயரும் வழங்கப்பட்டது.
- பன்னாட்டுப் பண நிதியத்தில் நிகர கடன் பெறும் தகுதி நிலை ஆகியவை பதிவு செய்யப்படுகிறது.

**அயல்நாட்டு செலுத்துச் சமநிலைக் கணக்கு வரைப்படம் :**

| வரவு (வருமான) = பற்று (செலவு) = நிகரநிலை (பற்றாக்குறைவு) (-), உபரி (+) |
|---|


| பற்றாக்குறைவு (பற்று > வருவாய்) |
|---|

**45.** (அ) **இலக்கணம் :** "உயர்கின்ற விலைகளையும், குறைந்த வேலையற்றோர் விழுக்காட்டையும் கொண்ட நல்ல வணிகக் காலங்களையும்; குறைகின்ற விலைகளையும், மிகுகின்ற வேலையில்லாத் திண்டாட்ட விழுக்காட்டையும் கொண்ட கெட்ட வணிகக் காலங்களையும் உள்ளடக்கியது வணிகச் சூழல் ஆகும்."

**- J.M. கீன்ஸ்**

**வணிகச் சுழற்சியின் கட்டங்கள்**

**வணிகச் சுழற்சி**




**பூரிப்பு கட்டம் (Boom) :**

- நீண்டகால இயல்பான வளர்ச்சி நிலைக்கு மேல் பொருளாதார நடவடிக்கைகள் உயர்ந்து முழு வேலைவாய்ப்பு நிலையைத் தாண்டுவது வணிகச் சூழலின் வளர்ச்சிக் கட்டம் எனப்படுகிறது.
- பூரிப்பு நிலையில் அனைத்துப் பொருளாதார நடவடிக்கைகளும் உச்சநிலையில் இருக்கும்.

**பின்னிறக்கம் (Recession) :**

- வளர்ச்சியின் உச்சத்தில் பூரிப்பை எய்திய பொருளியல் நடவடிக்கைகள் அடுத்ததாக கீழ்நோக்கித் திரும்புகின்றன. பூரிப்பில் வெடிப்பு நிலை ஏற்பட்டு நடவடிக்கைகள் பின்னோக்கி திரும்புவதைப் பின்னிறக்கம் என்கிறோம்.
- நம்பிக்கைகள் இருந்த இடத்தில் அவநம்பிக்கைகள் தோன்ற ஆரம்பிக்கும். இதன் காரணமாக முதலீட்டை பெருமளவுக்குக் குறைக்க ஆரம்பிப்பார்கள்.
- பங்குச் சந்தையில் விலை வீழ்ச்சியின் காரணமாக பெரும் அச்சம் உருவாகும்.

**மந்தம் (Depression) :**

- மந்த காலத்தில் பொருளாதார நடவடிக்கைகள் இயல்பு நிலைக்கு கீழ் மிகத் தீவிரமாக குறைந்து வரும். நிறுவனங்கள் நட்டமடைவதும், மூடப்படுவதும் பொது இயல்புகளாக இருப்பதுடன் வேலைவாய்ப்பின்மையையும் ஏற்படுத்தும்.
- வணிகச் சுழற்சியின் மிகமோசமான கட்டம் மந்தம் ஆகும்.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



**மீட்சி (Recovery or Revival) :**

- மந்த நிலைக்குப் பின் மீட்சி இடம் பெறுகிறது. இது மந்தத்திலிருந்து பொருளாதார நடவடிக்கைகள் மேல்நோக்கி திரும்பும் நிகழ்வாகும்.
- பொருளாதார நடவடிக்கைகளை மேல்நோக்கி திரும்ப ஊக்கமளிக்கின்றன.
- இதனால், தனியார் முதலீடுகள் மெதுவாக அதிகரித்து, பொருளாதார நடவடிக்கைகளான வேலைவாய்ப்பு, உற்பத்தி, வருமானம், கூலி, இலாபம் ஆகியன மீட்சி பெறுகின்றன.

(அல்லது)

(ஆ) (i) **பொதுக்கடன் :**

"பொதுக்கடன் என்பது நிதிக் கருவிகள் வாயிலாக அரசானது தனியார் துறையிலுள்ள தனிமனிதர்கள் அல்லது நிறுவனங்களிடம் பெறுவதாகும். இதனைக் கொண்டு தனியார் துறையைத் தூண்டி அதன் மனித வளங்கள், பிற உண்மையான வளங்களைப் பெருக்குவதற்கும், அந்த நிதியினைக் கொண்டு வளங்களை வாங்குதல் அல்லது நலத்தை உருவாக்குதல் அல்லது மானியங்களை வழங்குதல் ஆகியவற்றை செய்தலைக் குறிப்பதாகும்."

(ii) **முதன்மைப் பற்றாக்குறை :**

- முதன்மைப் பற்றாக்குறையானது நிதி பற்றாக்குறையிலிருந்து வட்டி செலுத்தலை கழித்த பின் உள்ள பற்றாக்குறையாகும். இது அரசின் உண்மையான சுமையைக் காட்டும்.
- மேலும் இதில் முன்னர் வாங்கிய கடனுக்கான வட்டியைக் கணக்கில் கொள்ளாது. எனவே முதன்மைப் பற்றாக்குறை என்பது அரசின் கடனுக்கான குறிப்பாக வட்டி செலுத்தலுக்கான தேவையைக் குறிக்கும்.
- எனவே நிதிப் பற்றாக்குறை முதன்மைப் பற்றாக்குறையைவிட அதிகமாக இருக்கும்.

| முதன்மைப் பற்றாக்குறை (PD) = நிதிப்பற்றாக்குறை (FD) – வட்டி செலுத்துதல் (IP) |
|---|

**46.** (அ) **நீடித்த அல்லது வளம் குன்றா வளர்ச்சியின் முக்கியத்துவம் மற்றும் அதன் நோக்கங்கள் :**

- இப்போதுள்ள தலைமுறையினருக்கு மட்டுமன்றி, எதிர்காலத் தலைமுறையினருடன் வாழ்வதற்குத் தேவையான வளத்தை வைத்துவிட்டு அடைகின்ற மேம்பாடே நீடித்த நிலையான மேம்பாடு எனப்படும்.
- மேல்தட்டு மக்களின் ஆடம்பர விருப்பங்கள் மட்டுமல்லாது ஏழை மக்களின் அடிப்படைத் தேவைகளான, உணவு, துப்புரவு, உடல்நலம், கல்வி முதலானவற்றையும் அளிக்க வேண்டும்.

**நீடித்த நிலையான மேம்பாட்டின் நோக்கங்கள்**

- எல்லா வடிவங்களிலும் எல்லா இடத்திலும் வறுமையை ஒழித்தல்.
- அனைத்து வயதினரின் நலமான வாழ்வை உறுதிப்படுத்துதல்.
- எல்லோரையும் உள்ளடக்கிய தரமான கல்வியை வழங்கி வாழ்நாள் முழுக்கக் கற்றுக்கொள்ள வசதி செய்தல்.
- பெண்களுக்கு அதிகாரம் வழங்குதல் பாலின சமன்பாட்டை சாதித்தல்.
- குடிநீரும், துப்புரவும் அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.
- தூய்மையான, நீடித்த, நிலையான, எளிதில் பெறக்கூடிய, சக்தியினை அனைவருக்கும் உறுதிப்படுத்துதல்.
- தேவையான கட்டமைப்புகளை வழங்குதல், தொழில்மயமாக்கல், புத்தாக்கங்களை ஊக்குவித்தல்.
- நாடுகளுக்குள்ளேயும், நாடுகளுக்கு இடையேயும் உள்ள சமமின்மையை அகற்றுதல்.
- பாதுகாப்பான, அமைதியான யாவரையும் உள்ளடக்கிய நகரங்களை உருவாக்குதல்
- நீடித்த நிலையான உற்பத்தியையும் நுகர்வினையும் உறுதிப்படுத்துதல்.

(அல்லது)

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



(ஆ) **புறவயக்காரணிகள் :** புறவயக்காரணிகள் உண்மையானவை, அளவிடக்கூடியவை. நீண்ட காலங்களில் இந்தக் காரணிகள் எளிதாக மாற்றமடையும்.

- **வருமானப் பகிர்வு :** சமநிலை வருமானப் பகிர்வுடைய சமூகத்தில் அதிகமான நுகர்வு விருப்பம் இருக்கும்.
- **விலை அளவு :** விலை வீழ்ச்சியடையும் போது, உண்மை வருமானம் அதிகரிக்கும், மக்கள் அதிகமாக நுகர்வார்கள் மற்றும் சமூகத்தில் நுகர்வு விருப்பம் அதிகரிக்கும்.
- **கூலி அளவு :** கூலி அதிகரிக்கும்போது நுகர்வுச் செலவும் அதிகரிக்கும்.
- **வட்டி வீதம் :** அதிக வட்டி விகிதம் மக்களை அதிக அளவில் பணத்தைச் சேமிக்க ஊக்கமளிக்கும், நுகர்வைக் குறைக்கும்.
- **நுகர்வோர் கடன் :** எளிய தவணைகளாக நுகர்வுக் கடன் அளிக்கும் போது அவர்கள் நுகர்வோர் பண்டங்களான குளிர்பதனப் பெட்டி, ஊர்திகள், கணினி முதலானவற்றினை வாங்குவார்கள். இது நுகர்வை அதிகப்படுத்தும்.
- **மக்கள் தொகை காரணிகள் :** மற்றவை மாறாமல் இருக்கும் போது குடும்ப அளவு அதிகமாக இருந்தால், நுகர்வு அதிகமாக இருக்கும்.

**47.** (அ) பேரியல் பொருளாதாரத்தின் பரப்பெல்லை மிகப் பெரியதாகவும் பல முக்கியமான பகுதிகளை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது.

- **நாட்டு வருமானம் :** நாட்டு வருமானம் கணக்கிடுதல், நாட்டு வருமானத்தில் பல துறைகளின் பங்கு முதலானவை பேரியல் பொருளாதாரப் பகுத்தாய்வின் அடிப்படை கூறுகளாகும்.
- **பண வீக்கம் :** பண வீக்கம் என்பது பொதுவான விலை அளவு தொடர்ந்து அதிகரிப்பதைக் குறிப்பதாகும். மொத்த விலைக் குறியீட்டெண், நுகர்வோர் விலைக் குறியீட்டெண், ஆகியவற்றைப் பயன்படுத்தி மொத்த விலை அளவை மதிப்பிடுவது அவசியமாக இருக்கிறது.
- **வணிகச் சுழற்சி :** பொதுவாக எல்லா நாடுகளும் வணிக ஏற்றத்தாழ்வாலும், வணிக சுழற்சியாலும் ஏற்படும் சிக்கல்களைச் சந்திக்கின்றன. மொத்த பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஒரு நாட்டின் வணிகச் சுழற்சி மாற்றங்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது.
- **வறுமையும் வேலையின்மையும் :** வளங்கள் நிறைந்த நாடுகளிலும் வறுமையும், வேலையின்மையும் மிகப் பெரிய சிக்கலாக உள்ளது. இது ஒரு பொருளாதார முரண்பாடுகளில் ஒன்றாகும்.
- **பொருளாதார வளர்ச்சி :** பேரியல் பகுத்தாய்வின் மூலம் தான் ஒரு பொருளாதார அமைப்பின் வளர்ச்சி, முன்னேற்றம், அவற்றைத் தீர்மானிக்கும் காரணிகள் ஆகியவற்றைப் புரிந்து கொள்ள முடியும்.
- **பொருளாதாரக் கொள்கைகள் :** பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதற்குப் பேரியல் பொருளாதாரம் உதவுகிறது. அடிப்படை சிக்கல்களுக்குத் தீர்வு காணவும், தடைகளைத் தகர்த்தெறியவும், வளர்ச்சியை அடைவதற்கும் பொருளாதாரக் கொள்கைகள் தேவைப்படுகின்றன.

(அல்லது)

(ஆ) **திட்டமிடலுக்கு எதிரான வாதங்கள் :**

- அங்காடி இயங்காமல் தோல்வியடைந்ததால் அரசு திட்டமிடல் மூலம் தலையிடும் அவசியம் உருவானது.
- திட்டமிடலுக்கு எதிராக வாதங்களையும் குறைகளையும் புரிந்து கொள்வோம்.

**தன் விருப்பம்போல் செயல்பட இயலாமை :**

- தன் விருப்பம் போல் செயல்பட இயலாததால் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது.
- திட்டமிடல் கட்டுப்பாடுகளையும் வழி முறைகளையும் விதித்து நாட்டிற்கு முதுகெலும்பாக உள்ளது.
- தலையிடாப் பொருளாதாரத்தில் நுகர்வு, பணியைத் தேர்வு செய்தல், உற்பத்தி செய்தல், விலை நிர்ணயம் செய்தல் ஆகியவற்றில் தன் விருப்பம்போல் முடிவெடுக்க அனுமதி உள்ளது.

**தன் முனைப்புக் குறைதல் :**

- மையப்படுத்தப்பட்ட திட்டமிடலில் நடவடிக்கைகளில் ஊக்கப்படுத்துதல், புதுமைகளைப் புகுத்துதல் ஆகியவற்றுக்கு ஊக்கமிருக்காது.

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000

www.surabooks.com
www.Padasalai.Net www.Trb Tnpsc.com



- தனியார் உரிமை இல்லாதது, இலாப நோக்கைக் குறைத்து தொழில் முனைவோர் திறம்பட முடிவு எடுப்பதையும், இடர் எதிர்நோக்குதலையும் குறைக்கிறது.
- திட்டமிடல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் அவர்களது முயற்சி, திறமை மற்றும் உற்பத்தித்திறன் ஆகியவற்றை கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.
- உயர் பதவியில் உள்ள அலுவலர்கள் அதிகாரத்தைத் தவறாக பயன்படுத்தும் போக்குத் திட்டமிடலில் தவிர்க்க இயலாத ஒன்றாக உள்ளது.

**அதிகமான நிருவாகச் செலவு :**

- திட்டமிடலின் நோக்கமென்னவோ தொழில் மயமாக்கல், சமூகநீதி, நாட்டு நிலைமையைச் சமப்படுத்துதல் ஆகியன உயர்வானவை. ஆனால் அதற்கு நாடு செலவிடும் தொகை அடையவுள்ள பலனைவிட அதிகமாக இருக்கும்.
- சரியான புள்ளிவிவரம் இல்லாமை, தவறாக கணிப்பது, திட்டமிடுதலை சரிவர செயல்படுத்துவது ஆகியவை வளங்களை வீணடித்து உபரி அல்லது பற்றாக்கு நிலைக்குக் கொண்டு செல்லும்.

**முன்கணிப்பதில் உள்ள சிரமங்கள் :**

- அரசு தடையில்லாத நாட்டில், விலை இயக்க முறையில், விலை, தேவை மற்றும் அளிப்பு ஆகியவை தானாக இயங்கி ஒன்றையொன்று சரி செய்து கொள்கின்றன.
- திட்டமிடல் நாடுகளில் இப்படி ஒரு வசதி இல்லை. நுகர்வும் உற்பத்தி அளவுகளைத் துல்லியமாக முன்கூட்டியே நிர்ணயிப்பது கடினம்.
- நிலையான பொருளாதார முன்னேற்றத்தையும், சமூக, சமத்துவத்தையும் திட்டமிடுதல் மூலம் சாதிக்க முடியும் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

☆☆☆

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com
enquiry@surabooks.com Ph: 8124201000 / 8124301000